2010 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஈ) மதுரை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு மதுரை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2010) பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஏ) மதுரை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு மதுரை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2010), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு மதுரை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2010)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

[@] 14–5–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரிவில்தானே பேசப் போகிறீர்கள்? சொல்லுங்கள்.

பிற்பகல் 1-35

திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகத்தை, சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி என்று பிரித்து, இப்போது மதுரை என்று பிரித்திருக்கிறீர்கள். ஏற்கெனவே மாணவர்கள் பாதிப்பை உணர்ந்து, அரசு ஒதுக்கீட்டிற்கான நுழைவுத் தேர்வு இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. நிர்வாக ஒதுக்கீட்டிற்கு மாணவர்கள் நுழைவுத் தேர்வின் மூலம்தான் இப்போது சேர்க்கப்படுகிறார்கள். கடந்த ஆண்டு தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற நிர்வாக ஒதுக்கீட்டிற்கு ஒரே கூட்டமைப்பு, பொறியியல் கல்லூரிகள் கூட்டமைப்பு மூலமாகத் தேர்வு நடத்தப்பட்டு, மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள். இப்போது என்னவென்றால், கோயம்புத்தூர் மண்டலத்தில் இருக்கின்ற, கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற, அங்கிருக்கின்ற பொறியியல் கல்லூரிகளெல்லாம் தனியாக ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தி, நாங்கள் தனியாகத் தேர்வு நடத்தவேண்டும், எங்களுக்கு அனுமதி தர வேண்டுமென்று நீதிபதியிடம் கோரி, தற்போது அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்தவுடனே, திருநெல்வேலி பகுதியிலே இருக்கின்ற அண்ணா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொறியியல் கல்லூரிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, எங்களுக்கும் தனியாக அனுமதி தாருங்கள், நாங்களும் தனியாக நிருவாக ஒதுக்கீட்டிற்கு மாணவர்களைச்

2010 மே 14] [திரு. சி.வி. சண்முகம்]

சேர்க்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இதைத் தொடர்ந்து திருச்சி அண்ணா பல்கலைக்கழகத்திற்குக் கேட்பார்கள்; இப்போது மதுரை அண்ணா பல்கலைக்கழகம் என்று ஆரம்பிப்பதற்கு அதற்கான சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்; இப்போது அவர்களும் கேட்பார்கள். மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வு இருக்கக்கூடாது என்பதுதான் ஏற்கெனவே இந்த அரசினுடைய கொள்கை. நுழைவுத் தேர்வும் இரத்துச் செய்யப்பட்டிருக்கிறது. நிருவாக ஒதுக்கீட்டிற்கு சில காரணங்களால் உயர் நீதிமன்றத்தினுடைய உத்தரவின் காரணத்தால், அதற்குத் தேர்வு வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது பல்வேறு மண்டலங்களாக அந்த நுழைவுத் தேர்வு பிரிக்கப்படுவதால், ஒரு மாணவன் கல்லூரியிலே சேருவதற்கு நிருவாக ஒதுக்கீட்டுக்கு நான்கைந்து தேர்வுகளை எழுத வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றான். அதுமட்டுமல்ல, நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. இப்படியே பல்வேறு தேர்வுகளை எழுத வேண்டிய நிலைமையில் மாணவர்கள் இருப்பதால், இதற்கு இந்த அரசு என்ன செய்யப் போகிறது? பல்வேறு நுழைவுத் தேர்வுகளைத் தவிர்த்து, மீண்டும் பழையபடியே ஒரே தேர்வு எழுதுவதற்கு இந்த அரசு இந்தச் சட்டமுன்வடிவிலே நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கத் தமிழுக்குப் பெயர்பெற்ற மதுரையில் அண்ணா பல்கலைக்கழகம் அமைப்பதை மனமுவந்து வரவேற்கிறேன். ஆனால், கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகத்தில் சென்ற வருடம் நான் M.B.A., (Health Administration) பயின்று மூன்று மாதங்களுக்கு முன்பு அங்கே Viva voce—க்குச் சென்றபோது, அங்கே கட்டட வசதி இல்லை. ஏன், கழிப்பிட வசதிகூடச் சரியாக இல்லை என்பது வருந்தத்தக்கது. அதேபோல், ஏற்கெனவே நெல்லையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்திற்கு சொந்தக் கட்டடம் இல்லை. அங்கே பதிவாளரும் மிகத் தாமதமாக நியமிக்கப்பட்டுள்ளார். துணைவேந்தரே clerical jobs-ஐக்கூட சேர்த்து செய்து கொண்டிருந்ததாகப் பத்திரிகைச் செய்திகள் எல்லாம் வந்திருந்தன. அண்மையில் A.I.C.T.E., approval இல்லாமலே பல course-களை

அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் நடத்திக் கொண்டிருந்தார்கள் என்பது வருந்தத்தக்கது. ஆகையால், சிறந்த கல்வியாளர்களைத் துணைவேந்தராக நியமிப்பது மிக முக்கியமானது என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்கலைக்கழகம் என்பது Research and Administration-இல் மட்டும்தான் கவனம் செலுத்த வேண்டும். அவர்களது முக்கிய வேலையே, கல்லூரிகளின் தரத்தை நிர்ணயித்து வழி நடத்துவதுதானே தவிர, அவர்களே தனியாகக் கல்லூரிகளைத் தொடங்கினால், வேலைப் பளுவின் காரணத்தினால் அவர்களால் சரியாகப் பணியாற்ற முடியாது, தரத்தில் கவனம் செலுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லா அண்ணா பல்கலைக்கழகங்களிலும் ஒரே syllabus மற்றும் கட்டணத்தைக் கொண்டு வர வேண்டும். ஐந்து Anna Universities—க்கும் சேர்த்து ஒரே Common Anna Universities Act-ஐக் கொண்டு வந்தால், எந்த மாணவனும் எங்கு வேண்டுமானாலும் சென்று பயில ஏதுவாக இருக்கும் என்பதை வலியுறுத்தும் அதே வேளையில், தமிழகம் முழுவதும் கல்வித் தரமும் சீராக இருக்கும் என்பதையும் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உயர் கல்வி மானியக் கோரிக்கையில், B.E., (தமிழில்) வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஏற்கெனவே கிராமப்புறத்தில் B.E., பயின்ற மாணவர்களுக்கு நல்ல பன்னாட்டு நிறுவனங்களில் வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கின்ற இந்த வேளையில், நம் அரசு பன்னாட்டு நிறுவனங்களுடன் MoU - புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுகின்ற வேளையில் B.E., (தமிழில்) படித்தவர்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்று அரசு வலியுறுத்த வேண்டுமென்றுதான் நான் வலியுறுத்தினேன். எனக்கு வாய்ப்பினைத் தந்தமைக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள் Consortium பற்றிக் குறிப்பிட்டார்கள். உச்ச நீதிமன்றத்தின் உத்தரவின்படி, ஒரே ஒரு Consortium-தான் இதுவரை இருந்தது. அந்த Consortium-கூட ஒன்றுதான் இருக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் சொல்லவில்லை. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ஒரு Consortium இருக்கலாம், அதற்காகவும் அனுமதிக்கலாம்; இதை

2010 மே 14] [டாக்டர் க. பொன்முடி]

அரசு அனுமதிப்பதில்லை. இதனால் உருவாக்கப்பட்டிருக்கிற குழுவின் நீதிபதி அவர்களிடம் அவர்கள் விண்ணப்பித்து அந்த Consortium-ஐப் பெற்றுக்கொள்கிறார்கள். அப்படித்தான் கோவை Consortium தனியாக அமைந்துள்ளது. திருநெல்வேலி, மதுரை போன்ற பல்கலைக்கழகங்கள் கேட்டால், அவர்களுக்கும் அந்த Consortium அமைத்துக் கொடுக்கப்படும். அது நீதிபதியினுடைய, அந்தக் குழுவினுடைய முடிவாகும். ஆக, குறிப்பாக, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு நுழைவுத் தேர்வு இரத்துச் செய்யப்பட்டதன் மூலமாக கிராமப்புறத்து மாணவர்கள் அதிகம் படிக்கிறார்கள். மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. சண்முகத்திற்கு Private Colleges குறித்து நடைமுறை ரீதியாக உண்மைகள் எல்லாம் தெரியும். Consortium நேரடியாகத் தேர்வு நடத்துகிறார்களா என்பது அவருக்கே தெரியும்; அவர் அமைச்சராக இருந்த காலத்திலே எப்படி நடந்ததோ, அதுபோலத்தான் இப்போதும் நடந்துகொண்டிருக்கிறது. அதிலே எந்தவித வேறுபாடும் இல்லை. அவரவர்கள் Private Colleges-லே சேர்த்துக்கொண்டு ஒரு list-ஐ அனுப்பிவிடுவார்கள். Consortium அதை approve பண்ணி அனுப்பிவிடும். அதுதான் நடைமுறையிலே நடந்துகொண்டிருக்கின்ற ஒன்று. அதனால் எல்லாக் கல்லூரி மாணவர்களும் அங்கே சென்று தேர்வு எழுதுவார்கள் என்பதெல்லாம் ஒரு கற்பனைதானே தவிர, நடைமுறைக் கூற்று அல்ல. எனவே, அமைச்சராக இருந்துகொண்டு, உண்மையை, நடைமுறை ரீதியாக நடப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த அடிப்படையில் consortiums ஆங்காங்கே உருவாவதன் மூலமாக, ஆங்காங்கே இருக்கிற மாணவர்கள் ஆங்காங்கே தேர்வு எழுதுவதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. அதனால் எந்தவிதமான குளறுபடியும் இருக்காது.

TRUTH ALONE TRIUMPHS

பிற்பகல் 1-40

மாண்புமிகு உறுப்பினர் திருமதி காயத்ரி தேவி சொல்கிறபோது, தமிழில் பொறியியல் படிப்பு பயின்ற மாணவர்களுக்கு சலுகை கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதேபோல, அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய பல்வேறு பிரிவுகள் உருவாக்கப்பட்டதன் விளைவே, ஆங்காங்கே இருக்கிற கிராமப்புற மாணவர்கள் அதிகமாகப் படிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் அவை உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மதுரை பல்கலைக்கழகம் தனியாக உருவாக்கப்படுவதை

மாண்புமிகு உறுப்பினர்களாகிய நீங்கள் வரவேற்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

துணைவேந்தர்கள் நியமிக்கப்படுவதைப் பொறுத்தவரையில், அது அரசினுடைய வேலை அல்ல. குழுவாக நியமிக்கப்பட்டு, அரசு அதிலே ஒரு உறுப்பினரைத்தான் நியமிக்கக் கடமைப்பட்டுள்ளது. அதனுடைய convener-ஏ ஆளுநர் அவர்களால்தான் நியமிக்கப்படுகிறார்கள். ஆளுநர்தான் அந்தக் குழுவினுடைய பரிந்துரையின் அடிப்படையில் துணைவேந்தர்களை நியமிக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 67 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 67 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2010 மே 14]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு மதுரை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) சென்னை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு சென்னை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2010) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(ஐ) சென்னை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010 ஆம் ஆண்டு சென்னை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2010), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.